# மறந்ததோ வையம்
# மறத்தமிழ் இனத்தை

www.tamilarangam.net

## அனைத்துலக கவனஈர்ப்பு வாரம்
## 30.10.1996 - 05.11.1996

ஈழத் தமிழர் வரலாற்றில் என்றுமே இடம்பெறாத ஒரு மாபெரும் இடம்பெயர்வு நிகழ்ந்து ஒரு வருடம் நெருங்குகின்றது. பௌத்த சிங்களப் பேரினவாத அரசின் ஆக்கிரமிப்புக்கொள்கையால், ஒரு மாபெரும் மனித அவலம் நிகழ்ந்து ஒருவருடம் நெருங்குகின்றது. சந்திரிகாவின் பேரினவாத இராணுவப் படை, குடாநாட்டில் நடத்திய சூரியக்கதிரின் வெம்மை தாளாமல் எம்மக்கள், எம் உறவுகள் எழுப்பிய அவலம் எம்முன் எதிரொலித்துக்கொண்டிருக்கிறதல்லவா. 30—10—1995 அன்று, ஒரே இரவில் உடுத்த உடையுடன், தாம் வாழ்ந்த மண்ணைப்பிரிந்து, துயரம் சுமந்து ஐந்து இலட்சம் மக்கள் உயிர்காக்க ஊர்துறந்த கொடுமை நிகழ்வின் நினைவு எதிர்வரும் 30—10.1996 அன்று. இந்த மனிதகுல அவலத்தை, எங்கள் மக்கள் பட்ட துன்பத்தை, படுகின்ற துன்பத்தை, வேதனையை, கொடுமையை இந்த வையம் அறியவைக்கவேண்டிய பொறுப்பு எங்களதே. எங்களுக்குரித்தான இந்த கட்டாய பணிக்காக, 30—10—1996 தொடக்கம் 05—10—1996 வரைப்பட்ட ஒருவார காலத்தை ஒதுக்குவோம். உலகம் பூராவும், தமிழர்கள் வாழுகின்ற நாடுகள் எங்கணும் இந்த வரலாற்றுப்பணி ஒரே காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட உள்ளன.

**பிரான்ஸ் வாழ் தமிழீழ மக்களே!**

இந்த கால இடைவெளியில், பொது வேலைத்திட்டத்தின் அடிப்படையில் எல்லோரும் இணைந்து இந்தப்பணியாற்ற முன்வருவோம்.

★ 30—10—1996 அன்று ஆரம்பமாகும் இக் கவன ஈர்ப்பு வாரத்தில், பிரதான வேலைத்திட்டமாக, பிரெஞ்சு மொழியிலான பிரச்சார நடவடிக்கையை மேற்கொள்ள உள்ளோம். இதில் கலந்துகொள்ளும் ஆர்வமுள்ளவர்கள் எமது பிரதிநிதிகளுடனோ அல்லது எமது அலுவலகத்துடனோ தொடர்புகொள்ளவும்.

★ 02—11—1996 அன்று, விழிப்புப் போராட்டம் நடைபெறும். தமிழ் மக்கள் வாழுகின்ற பிரதான பகுதிகளில், இரவு 7 மணியில் இருந்து நள்ளிரவு 12 மணி வரை, மெழுகுவர்த்தி ஏந்திய இவ் அமைதிப் போராட்டம் இடம்பெறும். [இது தொடர்பான விபரங்களை உங்கள் பகுதி பிரதிநிதிகளிடம் கேட்டுத் தெரிந்துகொள்ளவும்]

★ 03—11—1996 அன்று, பாரிஸ் நகரில் மாபெரும் ஒன்றுகூடல் நிகழ்வு இடம்பெறும் [இடம், நேரம் குறித்த விபரம் பின்னர் அறிவிக்கப்படும்]

இவ் அனைத்துலகக் கவனஈர்ப்பு வாரத்தில், உலகம் பூராவும் வாழுகின்ற முழுத் தமிழினமும் தனது வரலாற்றுக்கடமையை ஆற்ற முன்நிற்கும் இத்தருணத்தில், பிரான்சில் வாழுகின்ற தமிழ் மக்களும், உங்களின் பணியின் பரிமாணத்தை புரிந்துகொண்டு, தேசப்பணியாற்ற வாருங்கள் என அழைக்கின்றோம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

---

## சர்வதேச தமிழர் சம்மேளனம்

மேலதிக தொடர்புகட்கு: 01 43 58 11 42

தமிழ் அச்சகம் பாரிஸ் 42 09 60 64